


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் சைவத் திருமணச் சடங்குகள்

தமிழர் வாழ்வியலில் லௌகிகத்திற்குரிய செயற்பாடுகளின் மூலம் ஆத்மீகமும் படிப்படியாக வளர்ந்தேற வேண்டும் என்னும் நியதி தமிழர் வாழ்வியல் நியதியாகும். வாழ்வியலின் ஒவ்வோர் முக்கிய அம்சமும் சைவக் கிரியைகள் சகிதம் நடைபெற வகுக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சான்றுகளால் இவ்வுண்மை விளக்கமுறும்.

பூர்வக் கிரியைகள் என்ற வகுப்பில் உள்ள நான்கிற்கும் நடுநாயகமாக அமைவது திருமணக் கிரியையாகும். சிவனைச் சென்றடைதலையே தலையாய இலக்காகக் கொண்டுள்ள ஒருவனும் ஒருத்தியும் தாம் மகேஸ்வரனும் உமாதேவியுமாக (உமா மகேஸ்வரர்) எனும் பாவனையிலிருந்தபடியே ஒன்றிணைந்து சிவனை மறவாத நிலையில் இல்லறம் நடாத்தி புத்திரர்களுக்கு சிவன், உமை திருநாமங்களையே இட்டு அழைத்து இறுதிமூச்சு வரை சிவன் சக்தி பாவனையில் வழுவாதிருந்து வாழ்வை நிறைவித்துக் கொள்ள அடியீடு செய்து வைக்கும் சிறப்பொடு கூடியது இச்சைவத் திருமணக் கிரியைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் என்பது ஒத்த இயல்புடைய ஆண் மகனையும் பெண்மகளையும் பலரறிய இல்லறத்தில் இணைத்து வைக்கும் சடங்காகும். இவ்வாறு இணைத்து வைக்கும் தலைவன் தலைவியாகிய இருவரினதும் ஒன்றுபட்ட மனவிருப்பமே திருமணத்திற்கு வேண்டிய அதிமேலான முதலீடாகும்.

மேலான பதவிகளையோ எல்லையில்லா இன்பத்தையோ கொடுத்துக் கொண்டிருக்கும் சுவர்க்க வாழ்வை அடைவதற்கு வேண்டிய உறுதிப் பொருள்களாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன அமைகின்றன. ஒத்த இயல்புடைய ஆணும், பெண்ணும் மன ஒருமைப்பாடுடையவர்களாகப் பொருந்தும் வகையாக வாழ்வது மூலந்தான் இவ்வுறுதிப் பொருள்களை அடையமுடியும். இல்லற வாழ்வு இவற்றினை மூலதனமாகக் கொண்டு நடைபெற வேண்டும்.

## திருமணப் பேச்சு

மணமகள் வீட்டினர் தங்களது குடும்பத்திற்குப் பொருத்தமான ஒரு குடும்பத்திலே மணமகனைத் தேடிக் கொண்டு இடையே நிற்கும் பெரியோர் சிலரைப் பயன்படுத்திப் பேச்சை ஆரம்பிப்பார்கள்.

பெண்ணின் வயது, உயரம், கல்வி, கிரகநிலை, அழகு முதலான நலன்கள் பேச்சின் பொருந்து நிலைக்கு இன்றியமையாதனவாகும்.

பெற்றோரால் அல்லது பெரியவர்களால் நிச்சயிக்கப்படும் திருமணப்பேச்சு இன்று மணமகளின் பக்கத்தைச் சார்ந்தவர்களினாலேயே முதன் முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு நிறைவாக உள்ளது. ஆனால் இந்த முறை முன்பு மாறியிருந்தது. மணமகன் சார்பான பெரியவர்கள் தான் பெண் கேட்டுச் சென்றுள்ளதாக வரலாறு கூறுகின்றது.

திலகவதியாரை பெண்கேட்டு கலிப்பகையார் பகுதியினரே புகழனாரிடம் போனதாகப் புராணம் கூறுகிறது. இதே போல் திருஞானசம்பந்தருக்குப் பெண் கேட்டு நம்பியாண்டார் நம்பியிடம் சென்ற வரலாறும் இதை நிரூபிக்கின்றது. இன்றைய நாளிலே தான் பெண் வீட்டாரே வரன் முதலில் தேட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டதென்பதை அறிய முடிகிறது. திருமணங்கள் பேசி நிச்சயிக்கப்படும்போது எந்த ஊரைச் சேர்ந்தவர், அவரது சமயம், குலம் யார் யார் உறவினர்கள், குடும்ப உறுப்பினரது திருமணத் தொடர்புகள் யாவும் இருபகுதியினரும் மறைமுகமாகத் தனித்தனி ஆய்வை நடாத்தி அறிந்து கொள்வார்.

## பொருத்தம் பார்த்தல்

மணமகள் வீட்டினரோ மணமகன் வீட்டினரோ தத்தமது மரபிற்கும் அந்தஸ்திற்கும் பொருத்தமானவர் என்று கண்டபின்னர்தான் திருமணத் தொடர்பிற்கு ஆயத்தமாவர்.

தேவார காலத்திலும் இதே மரபு இருந்ததென்பதை அறிய முடிகின்றது.

இருவரின் சாதகப் பொருத்தம் பார்க்கப்படும். அதுவும் சாதகமாக அமைந்துவிட்டால் இருபகுதியினரும் சேர்ந்து திருமணத்திற்குரிய சுப நாளையும், பொன்னுருக்கலுக்குரிய நந்நாள் ஒன்றையும் தேர்ந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் உருக்கல்

திருமணநாளுக்கு முன்னர் (இரண்டு மூன்று நாள் முன்னர்) உள்ள ஒரு சுபநாளில் சுபமுகூர்த்த வேளையில் மணமகன் இல்லத்தில் திருமாங்கல் யத்திற்கான பொன் உருக்கல் நிகழும். மங்கல வாழ்வுடைய பொற் கொல்லர் ஒருவரால் நிகழ்த்தப் பெறும். மணமகள் வீட்டினரும் இந்நிகழ்வில் கலந்து கொள்வர். அந்த வேளை உருக்கப்படும் முழுத் தங்கப் பவுணிலேயே தாலி செய்யப்படும். பொன் உருகும் முறைகொண்டும் மணமக்களின் எதிர்கால வாழ்வை - வாழ்வு எப்படி அமையும் என்பதையும் கண்டு கொள்ளலாம் என்பார்கள். தொடர்ந்து கன்னிக் கால் நாட்டல் இடம்பெறும். திருமண விழாவுக்கு அமைக்கப்படவுள்ள பந்தலின் முதலாவது கால் என்பதே இது. அன்றே மணமகள் வீட்டிலும் கன்னிக் கால் நாட்டப்படும். இந்நிகழ்விலும் மணமகன் வீட்டினர் பெண்வீடு சென்று கலந்து கொள்வர். கன்னிக்காலைச் சுற்றி நவதானியங்கள் இட்டுப் புனித நீர் தெளிக்கப் படும். முளை கொண்டிருக்கும் நவதானியம் மணமகன் திருமாங்கல்யதாரணத்திற்கு வரும்போது கொண்டு வரப்படுதல் முன்னைய நாள் மரபு.

## திருமணப்பந்தல்

பெண்வீட்டில் பொன்னுருக்கலன்று நாட்டப்பெற்ற பந்தல் காலுடன் இணைத்து திருமணப் பந்தல் போடப் படும். இப்பந்தலில் மணவறை கிழக்கு நோக்கி அமைக் கப்படும். மணவறை முன் சுவாமி, அம்பாள் கும்பங்கள், சந்திர கும்பம், பிள்ளையார் பூசை, பஞ்சகௌவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைக்கென ஒரு கும்பம், மஞ்சள் மாவில் அறுகம் புல்லுடன் கூடிய பிள்ளையார், நவக்கிரக கும்பங்கள், அக்கினி கிரியைக்கான பாத்திரம், வடக்கே அம்மியும், கிழக்கே மஞ்சள் குங்குமம் கலந்த நீருள்ள பாத்திரம், ஆகியன வைக்கப்பெறும். நடுவில் நேரிய முள்முருக்க மரக்கிளையிலான அரசாணியும் அதற்கு வெள்ளை வஸ்திரம் கட்டி அழகு படுத்தப்படும். இதன்மேலே நான்கு மூலைக்கு நான்கு அரசாணி மாலைகளும், கீழே நான்கு நிறைகுடங்களும் நான்கு குத்து விளக்கு களும் வைக்கப்படும்.

அரசாணியாக அரசு ஆல், மூங்கில், ஆகியவற்றின் கொப்புக்களை முற்காலத்தில் வைத்ததாக அறியமுடி கின்றது. இன்றும் மலையத்திலுள்ளோர் இவற்றை வைத்து திருமணக்கிரிகைகள் செய்வதைக் காணலாம். சந்திரகும்பத்தின் முன் மண்சட்டியில் மணல் இட்டுப் பாலிகை போடுவதற்கு ஆயத்தமாக வைத்திருப்பர். மண்டபம் மகர தோரணம். மாவிலை, சரங்களினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

## மாப்பிள்ளை அழைப்பு

திருமணத் தினத்தன்று பெண் வீட்டிற்கு மணமகனை அழைத்துச்செல்லப் பெண் வீட்டார் வருகை தருவர் மணப்பந்தலில் கும்பம் வைத்து மங்கல விளக்கேற்றிப் பசுவின் சாணம் அல்லது மஞ்சள் மா அறுகம்புல் ஆகியவற்றைக்கொண்டு பிள்ளையார் பிடித்துவைப்பர், மணமகன் கும்பத்தை முன்னாகக் கொண்டு கிழக்கு நோக்கி இருக்கக் கூடியதாக ஒரு பலகையில் வெள்ளைத் துணி விரித்து விடுவர். பெண் வீட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து வந்த பிரதிநிதி ஒருவர் மணமகனை அழைத்து வந்து அப்பலகையின் மேல் கிழக்கு நோக்கி அமர்த்துவார். குத்து விளக்கேற்றி, பிள்ளையார், கும்பம் ஆகியவற்றுக்கு கற்பூரதீபங்காட்டி, வடக்கு நோக்கி ஒருவர் இருந்து தலைப்பாகையுடன் தேங்காய் உடைக்க, சுற்றத்தவர் பெரியோர்கள் மணமகனின் மொட்டாக்குத் துணியைப் பின் தள்ளி உச்சியில் பால் அறுகு வைப்பர். மீதமான பால் அறுகினையும் நிறைவாகத் தடவிப் புனிதப்படுத்தி நீராட்டுவர்.

மாப்பிள்ளை இந்நிகழ்வின் போதும், நீராடித் திரும்பும் போதும் இரு கைகளிலும் வெற்றிலைச் சுருள் ஏந்தி வருவார். மணமகனின் அலங்காரம் முடிந்ததும் மாப்பிள்ளைத் தோழன் மணமகனை மணப்பந்தலில் கிழக்கு முகமாக அமரச் செய்து அவ்விடம் விநாயகர் வழிபாட்டுடன் தேங்காய் உடைக்க மாப்பிள்ளைக்கு கடுக்கன் பூணும் வைபவம் நடைபெறும். பின்னர் பெரியோர் ஒருவரால் அவருக்கு தலைப்பாகை வைக்கப்படும். தோழன் மலர்மாலை அணிவிப்பர். சபையிலுள்ளோர் மணமகனை ஆசீர்வதித்த பின்பு சபையினருக்கு உணவு பரிமாறி உபசரிப்பர். விருந்துபசாரம் நிறைவேறியதும் மணமகள் இல்லம் நோக்கி மங்கலப் பொருள்களை சுமங்கலிகள் சுமந்துவர வாயிலில் நிறைகுடம் மங்கல தீபம் பன் னீர்ச் செம்பு,சந்தனம், குங்குமம், வெற்றிலைத் தட்டம் ஆகியன வைக்கப்பட்டுள்ள மேசை முன்பாகத் தோழ னுடன் மணமகன் நிற்பார். அவ்விடத்தில் சுமங் கலிகள் இருவர் ஆரத்தியெடுத்து மணமகனுக்கும் தோழ னுக்கும் ஆரத்திப் பொட்டினை இட்டு வாழ்த்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசையை வலப்புறமாக சுற்றி நிலபாவாடையின் மேல் மாப்பிள்ளையையும் தோழனையும் மங்கள வாத்தியங்கள் சகிதம் அழைத்துச் சென்று திருமணம் நடைபெறும் இடம் நோக்கிச் செல்ல ஒழுங்குகள் செய்வர்.

## மணப்பெண்ணைப் புனித நீராட்டுதல்

சம காலத்தில் மணமகன் வீட்டிலிருந்து மணமகள் வீட்டிற்குச் சென்ற பெண்பிள்ளைத் தோழியும் ஏனை யோரும் பெண்ணை இருத்தி பால் அறுகு வைத்து நீராட்டுவர். (இதில் மணமகன் நீராட்டுப் போல சகல அம்சங்களும் இருக்கும்) பெண்ணை அலங்கரித்து உபசரித்து மணவறைக்குச் செல்லக்கூடிய தயார் நிலையில் வைத்திருப்பர்.

## மணமகனை வரவேற்றல்

திருமணப்பந்தலின் வாயிலுக்குத் தோழனுடன் மணமகன் வந்தவுடன் பெண் வீட்டினர் எதிர்கொண்ட ழைத்து, நிறைகுடத்துடன் வெற்றிலைத் தட்டம் பன்னீர்ச் செம்பு, சந்தனக்கும்பா, பாலிகை ஆகிய மங்கல பொருள்கள் வைக்கப்பெற்ற மேசையில் முன் நிற்கச் செய்து தோழன் மணமகனின் பாதங்களை நீர்கொண்டு கழுவ மணமகன் தோழன் கையில் மோதிரம் அணி விப்பார். பின் சுமங்கலிகள் இருவர் ஆரத்தி எடுத்து மாப்பிள்ளைக்கும் தோழனுக்கும் பொட்டிடுவர். அதன் பின் மணவறைக்கு அழைத்துச் செல்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரியா குரு

குரு அங்கலட்சணம் உடையவராகவும், அஃதாவது எவ்விதக் குறைபாடுகள் இல்லாதவராகவும், மங்கல வாழ்வுடையவராகவும் கிரியை பற்றிய விளக்கம் நிறை வாகவுள்ளவராகவும், சாந்தகுணம் உடையவராகவும், கிரியைகளைச் செய்வதில் நிறைந்த கவனமுடைய வராகவும், திருமணபந்தத்தில் இணையும் இரு வீட்டின ரையும் நன்கு அறிந்தவராகவும் இருப்பது சிறப்பம் சமாகும். அத்துடன் முதிர்ந்த அனுபவமுடைய குரு சிரேஷ்டராக இருப்பது சாலச் சிறந்தது. (சைவக் குருக்கள் அல்லது சிவப்பிராமணக் குருக்கள் கிரியா குருவாக இருப்பார்)

## கிரியை தொடங்குதல்

கிரியா குரு முதலில் மணமகனுக்குத் திருநீறு கொடுப்பார். பின் சைவக் கிரியைகள் அனைத்திற்கும் பொதுவான முதற்கிரியையாகிய சங்கற்பம் செய்தல், பிள்ளையார் பூசை, புண்ணியாகவாசனம் பஞ்ச கௌவியபூசை, பாலிகையிடல், (அங்குராப்பணம்) காப்புக் கட்டுதல் (இரட்சாபந்தனம்) ஆகியன நடை பெறும்.

## சங்கற்பம்

மணமகனுக்குத் திருநீறு கொடுத்து தருப்பை தரிப்பித்து (பவித்திரம்) இன்ன வருடத்து அயன, ருது மாத, பட்ச, நட்சத்திர திதி, வாரஇலக்கின, சுபமுகூர்த்த வேளையில் இன்ன நட்சத்திர இராசியுடைய மணமக னுக்கு அவரது திருமணத்தின் போது இன்னஇன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியைகளை குருவாக இருந்து நடத்தப்போகிறேன். என்றும், மணமகன், சிவாச்சாரியார் செய்யும் இந்தக் கிரியைபூர்வமாகத் திருமணம் செய்யப் போகிறேன் என்றும் உறுதி பூணுதல். மணமகளும் திருநிறைச் செல்வி.....ஐத் இதே போன்று சங்கற்பம் செய்தல் வேண்டும்.

## விக்கினேஸ்வரர் பூசை

நாம் தொடங்குகின்ற இத்திருமணக் கிரியைகளை எவ்வித இடையூறும் இன்றி இனிதாக நிறைவேற்றி வைக்க வேண்டுமென விநாயகரை வழிபடும் நிகழ்வு ஆரம்பத்தில் இடம்பெறும். மஞ்சள் மாவினால் பிள்ளையார் பிடித்து அதில் பிள்ளையாரை எழுந்தருளச் செய்தல் வேண்டும். தேங்காய் ஒன்றினை எடுத்துத் தூபம், சந்தனம், புஷ்பம், அட்சதையிட்டுப் பிள்ளை யாரைத் தியானித்து இரு பாதியாக உடைத்து நிவேதனம் செய்தல் வேண்டும். வெற்றிலை பாக்கு, வாழைப்பழம் வைத்து, தூபதீபம், கற்பூர நீராஞ்சனம் காட்டி தோத்திரம் பண்ணுதல் வேண்டும்.

## புண்ணியாக வாசனம்

திருமணமண்டபத்தினையும், மங்கல பொருள்க ளையும், மணமகனையும் மந்திர ஜலம் தெளித்துச் சுத்தப்படுத்தலாகிய வருண கும்ப பூசையும், பஞ்ச கௌவிய பூசையும் இடம் பெறும். மணமகன் ஆத்ம சுத்திக்காக மூன்று தத்துவங்களையும் சொல்லி பஞ்ச கௌவியத்தை உட்கொள்வார். இதே போன்று மணமகளும் அழைத்து வரப்பட்டபின் பஞ்ச கௌவியம் உட்கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முளைப்பாலிகை இடல் (அங்குரார்ப்பணம்)

மணவறையிலுள்ள சந்திர கும்பத்திற்கு முன்பாக வைக்கப்படும் புனித மண் நிரப்பப்பட்டுள்ள பாத்திரத்தினுள் மணமகன் பகுதியைச் சார்ந்த மூன்று சுமங்கலிப் பெண்களைக்கொண்டு நவதானியம் ( பாலிகை) இடுவித்து பாலுடன் கூடிய புண்ணிய சலங்கொண்டு தெளித்து முளை கொள்ளச் செய்வர். மணமகள் சார்பிலான மூன்று சுமங்கலிகளைக்கொண்டும் இதேபோல் நிகழ்த்துவர்.

திருமணத்திற்கு மூன்று நாட்களின் முன்பே ஐந்து சிறிய மண் சட்டிகளில் மண் நிரப்பிச் சமங்கலிகளான பெண்கள் மூவர் அல்லது ஐவர் பாலிகையிட்டு புனித நீர் தெளித்து முளை கொள்ளச் செய்ய வேண்டும். மணமகன் மணவறைக்கு வரும்போது இவ் முளைப் பாத்திரங்கள் கொண்டு வரப்படும். இதுவும் ஒருவழக்கமாக இருந்துவருகிறது.

## காப்புக் கட்டுதல் ( இரட்சாபந்தனம்)

தொடங்கிய கருமம் நிறைவேறும்வரை எவ்வித தீங்குகளோ, இடையீறுகளோ, துக்கங்களோ, மணமக்களை வந்தடையா திருக்கவேண்டிச் செய்யப்படுவதாகும். தட்டத்தில் தேங்காயின்மேல் முன்னரே ஆயத்தமாக வைத்திருந்த காப்பு நூலை மணமகனின் வலது கையில் கிரியா குரு கட்டுவார். காப்புக் கட்டும் வேளை மாப்பிள்ளை வீட்டார் தேங்காய் உடைப்பர். கெட்டி மேளம் கொட்டப்படும். மணமகள் வந்தபின்பு தான் இதே போன்று அவருக்கும் காப்பு கட்டுவர். இதற்குப் பெண்வீட்டார் தேங்காய் உடைப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாகேஸ்வரன் யாகேஸ்வரி பூசை

யாகத்தின் தலைவர் என்பதால் பரமேஸ்வரனை யாகேஸ்வரர் என்றும் யாகத்தின் தலைவி என்பதால் பார்வதி அம்பாளை யாகேஸ்வரி என்றும் அழைப்பர். ஈசான மூலையில் வைக்கப்பட்டுள்ள கும்பங்களில் பார்வதி, பரமேஸ்வரனுக்கு பூசை செய்து கிரியா குருவானவர் சிவோகம் பாவனை மூலம் தம்மைச் சிவமாக்கிக் காண நிற்பார்.

## நவக்கிரக பூசை

இத்திருமண நிகழ்வின்போது நீங்கள் யாவரும் நல்லருள் புரியவேண்டும் என்று நவக்கிரக தேவர் களுக்கு என அமைக்கப்பட்டுள்ள நவகும்பங்களுக்குப் பூசை செய்து வேண்டிக்கொள்ளுதல். இவ்வாறு நவக் கிரக தேவர்களிடம் ஆசி பெற்றுக் கொள்ளுதல் இப் பூசையாகும்.

## அக்கினி காரியம்

சுமங்கலிப் பெண்கள் மூலம் அக்கினி பெற்று ஓம குண்டத்திலிட்டு இறைவனை அக்கினியில் எழுந்த ருளச் செய்து அவிப்பாகம் இட்டுப் பூசித்து அருளாசி பெறல்.

## மணமகளை அழைத்தல்

தோழி மணமகளை அழைத்து வந்து மணமகனின் வலப்புறமாக இருத்துவர். குரு திருநீறு வழங்கி பவித்திரம் கொடுத்து இடதுகை மோதிர விரலில் தரிக்கச் செய்து சங்கற்பம் செய்து, விநாயக வழிபாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுடன் முன்னரே வைக்கப்பட்டிருந்த காப்பு நூலைப் பூசித்து மணமகளின் இடதுகையில் கட்டுவார். இந்நேரம் பெண் வீட்டார் ஒருவர் தலைப்பாகை கட்டி வடக்கு நோக்கி இருந்து தேங்காய் உடைப்பார். காப்புக் கட்டும்போது கெட்டிமேளம் ஒலிக்கச் செய்வர்.

## பிதிர் ஆசீர்வாதம்

ஆசிபெறும் நோக்காக பிதிர்களை தேவர்களுடன் எழுந்தருளச் செய்து வழிபடுதலாகும். மணமகளின் பெற்றோர் மணமகளுக்கு வலதுபுறமாகவும், மணமக னின் பெற்றோர் மணமகனுக்கு இடது புறமாகவும் கிழக்கு முகமாக அமர்ந்து சங்கற்பஞ் செய்து விநாயகர் வழிபாடு ஆற்றி, பஞ்சகௌவியம் பருகி, பிதிர், தேவர் பிரீதிக்காக குருவுக்கு இரு தானங்களும் வழங்கச் செய்து பிதிரரின் ஆசியைப் பெறச் செய்வார்.

## வரபூசை

மணமகனை உபசரித்தல், வரபூசை என வழங்கப் படும். மாப்பிள்ளையைச் சிவபெருமான் எனப் பாவனை செய்து அவரது பாதங்களை ஒரு தாம்பாளத்தில் வைக்கச்செய்து, மணமகளின் தாய் நீர் வார்க்கத் தந்தை கால்களைக் கழுவி சந்தனம், புஷ்பம், ஆகியன சாத்தி மங்கலப் பொருள்களை வழங்கி உபசரிக்க வேண்டும்.

## கன்னிகாதானம்

மாப்பிள்ளைக்கு இடதுபுறம் அவரது பெற்றோரும், பெண்ணுக்கு வலதுபுறம் அவரது தாய் தந்தையரும் அமர்வர். மணமக்களின் தாய் தந்தையர் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு பகுதியாரும் சங்கற்பம் செய்வர். மணமகளின் பெற்றோர் மணமகனின் பெற்றோருக்கும், மணமகனின் பெற்றோர் பெண்ணின் பெற்றோருக்கும் சந்தன, குங்கும திலகமிட்டு பன்னீர் தெளித்து மரியாதை செய்வர். முதலில் பெண் பிள்ளையின் பூட்டன், பேரன், தந்தை, மணமகள் ஆகியோரின் பெயர்களையும், இதே போல் மாப்பிள்ளையின் கோத்திரத்தினையும், பூட்டன், பேரன், தந்தை, மணமகன் பெயர்களையும், குரு மும்மூன்றுமுறை மாறிமாறிக் கூறுவர்.

பெண்ணின் தாயார் தாரைவார்க்க (தொடர்ந்து நீரினை வார்க்க) வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம் பழம், மஞ்சள், வாழைப்பழம், வெள்ளி, பொன், நறுமலர்கள், ஆகியன கொண்டு பெண்ணின் இரு கைகளையும் பற்றிப் பெண்ணின் தந்தை மாப்பிள்ளை யின் கையில் கொடுப்பார். இந்த நேரம் மணமகளின் நெருங்கிய உறவினர் தேங்காய் உடைப்பார். கெட்டிமேளம் கொட்டப்படும். இந்நிகழ்வின்பின் மணமகன் கொண்டுவந்த மங்கல நாண் (தாலி) கூறைச்சேலை (புதியசேலை) கண்ணாடி, மலர்மாலை, மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு மலர் முதலிய மங்கலப்பொருள்களை விதிப்படி பூசித்து குருவால் ஆசீர்வதித்து, அக்கினியால் சுத்தி செய்தபின் மாப்பிள்ளை வீட்டினர் சபையிலுள்ள பெரியோர் களுக்கும், சுமங்கலிகளுக்கும், காட்டி அவர்களின் நல்லாசி பெறுவர். பின்னர் மணமகன் கூறையை மணமகளுக்குக் கொடுக்க தோழியும், மங்கல மங்கை யரும், மணமகளை அழைத்துச் சென்று கூறை உடுத்துவர். பின் மணமகள் தோழியுடன் மணவறைக்கு அழைத்து வரப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கல நாண் பூணல் (தாலி கட்டல்)

கூறை உடுத்தி வந்த மணமகள் , மணமகனின் வலப்புறத்தில் இருப்பார். சுபமுகூர்த்த நேரத்தில் மண மகன் பெண்ணின் வலப்புறமாக நின்று, வடக்கு நோக்கி இறைவனைத் தியானித்துக்கொண்டு கிரியாகுரு வழங்கும் மங்கல நாணை இருகரங்களிலும் பற்றி, சிவாச்சாரியார் வாழ்த்த, கொட்டுமேளம் முழங்க பெரி யோர் மனதார வாழ்த்த, மங்கல மங்கையர் மலர் தூவியும் அட்சதை போட்டும் வாழ்த்த, மாப்பிள்ளை பகுதியில் தருமம் தவறாத அறவாளர் தேங்காய் உடைக்க, அற நெறி நிற்கும் அந்தணர்கள் ஆசி கூற, சபையோர் புஷ்பம், அட்சதை தூவி வாழ்த்த மணமகன் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவார். இந்த நேரம் மாப்பிள்ளை "யான் சிரஞ்சீவியாக இருப்பதற்கு காரணமாக இத் திருமாங்கல்யத்தை உன்கழுத்தில் கட்டுகிறேன்" என்றும், "ஓ பாக்கிய வதியே நீயும் நூற்றாண்டு காலம் வாழ்வாயாக" எனக் கிரியா குரு கூறும் மந்திரப் பொருளை மனதுள் உள்ளி ருத்தித் தாலி முடிச்சிலே திருநீறிட்டுத் தாலியில் சந்தனம், குங்குமம் அணிந்து பெண்ணின் நெற்றியில் குங்கும திலகம் இட்டு (மாப்பிள்ளை, தனது இடத்தில் இருப்பார். பின் மணமகள் தனது நாயகனுக்கு மாலை சூட்டுவார். இதன்பின் நாயகியைத் தனது இடப் பாகத்தில் இருக்கச் செய்து மாப்பிள்ளை மாலை சூட்டுவார். அதன் பின்பே தான் கொண்டு வந்த மங்கலப் பொருள்களாகிய மஞ்சள், குங்குமம், திலகம் மலர், வாசனைப் பொருள்கள், சீப்புக் கண்ணாடி ஆகியவற்றைப் பெண்ணுக்கு வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரம் ஒருவருக்கொருவர் குங்குமத் திலகமிட்டு கண்ணாடியில் தம்மைப் பார்த்து மகிழ்வர்.

## பால் பழம் வழங்கல்

பால், சர்க்கரை, தேன், வாழைப்பழம், பலாப் பழம், மாம்பழம் ஆகியன சேர்ந்த பஞ்சாமிர்தத்தினை மணமக்கள் ஒருவருக்கொருவர் மும்முறை பரிமாறிக் கொள்வர். முதலில் பெண் கணவனுக்கு மூன்று முறையும், பின் கணவன் பெண்ணுக்கு மூன்று முறையும் பால் பழம் வழங்குவர். இந்நேரம் உட்கொள்வது மறைவிற்குரியதால், திரை பிடித்து மறைப்பர்.

## கோமாதா தரிசனம்

இல்லற வாழ்வு வாழ ஆரம்பிக்கும் தம்பதிகள் வாழ்க்கைக்கு வேண்டிய அட்ட ஐஸ்வரியங்களையும் வேண்டிப் பசுவின் யோனிப் பாகத்திலிருக்கும் இலட்சுமி தேவியை வணங்குவர். கோமாதாவை கிழக்கு முகம் நோக்கி நிற்கச் செய்து விபூதி, குங்குமம், மலர் சாத்தி கற்பூரதீபம் காட்டி வழிபடுவர். பசுவிற்குத் தம்பதிகள் வாழைப்பழம் கொடுத்து உண்ண வைப்பர். பசுவின் உடல் எங்கும் உறைகின்ற தேவர்கள், முனிவர்கள், தெய்வங்களின் ஆசி இதன் மூலம் கிடைக்கும்.

## கைப்பிடித்தல் ( பாணிக்கிரகணம் )

இறைவன் திருவருளால் உன்னைத் திருமணஞ் செய்கிறேன். தர்மம் செய்யவும், சந்ததி விருத்திக்கும் திருமணம் செய்யப்படுகிறது. நீயும் யானும் முதுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையடைந்தாலும் ஒருவரை ஒருவர் பிரியாது இருப் போம் என உன்னைக் கைப்பிடிக்கின்றேன். என மணமகளின் கையைப் பிடிப்பார்.

## ஏழடி நடத்தல் (ஸ்ப்தபதீனம்)

முதலாவதாக அக்கினியை வலம்வர ஆரம்பிக் கின்றபோது நெல் தூவப்பட்ட இடத்தில் பெண்ணின் வலது காலை மணமகன் கைகளால் பிடித்து, ஏழடி எடுத்து வைக்கும்படி செய்யவேண்டும். ஒவ்வோர் அடியும் எடுத்து வைக்கப்படும்போது ஒவ்வொரு மந்திரமும் சொல்லப்படும்.

பெண்ணே நாம் நடத்தவுள்ள இல்வாழ்வில் நாள்முழுதும் எமக்கு

1. உணவு கிடைக்க வேண்டும்.
2. நல்ல பலம் கிடைக்க வேண்டும்.
3. இறைவழிபாட்டுடன் நல்வினை செய்ய வேண்டும்.
4. மனச்சாந்தி கிடைக்க வேண்டும்.
5. நல்லறிவு கிடைக்க வேண்டும்.
6. சகலபோகங்களும் கிடைக்க வேண்டும்.
7. யாகத்திற்கு வேண்டிய துணைகள், தவம் கிடைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழடி நடந்த நாம் இருவரும் சிநேகிதரானோம். நாம் இருவரும் இந்த ஏழு செல்வங்களையும் ஈட்டிடுவோம், இன்பதுன்பங்களைச் சேர்ந்து அனுபவிப் போம். என்னுடன் கூடவா என்னும் பொருளில் இந் நிகழ்ச்சி அமையும்.

## அம்மி மிதித்தல்

மணமகளின் எட்டாவது (வலது) அடியை மண மகன் தனது கையாற் பிடித்து அம்மியில் வைத்து "எத்துயர் ஏற்படினும் இக்கல்லுப்போல உறுதியாக இருப்போம். என்றும், ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய கற்பு நெறியில் நாம் இருவரும் தவறோம்" என்றும், சங்கற் பித்துக் கொள்ள வேண்டும். அம்மியில் வைத்த வலது காலின் பெருவிரலுக்கு அடுத்த விரலில் மெட்டி (மிஞ்சி) என்னும் கால் விரல் அணியை மாப்பிள்ளை அணிவிப்பார்.

## மோதிரம் எடுத்தல் (கணையாழி எடுத்தல்)

ஏழடி எடுத்து வைத்து அம்மி மிதித்து அக்கினியை வலம் வரும்போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள், நீர் நிறைந்த பாத்திரத்தில் நாயகனின் மோதிரத்தைப் பெற்று கிரியா குரு போடுவார். மண மக்கள் இருவரும் சமகாலத்தில் கைகளால் தேடி மோதிரத்தை எடுப்பர். மூன்று முறை அக்கினியை வலம் வரும்போதும் மோதிரம் எடுத்தல் நிகழும். இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து எடுத் தல் வேண்டும். வாழ்க்கையில் ஒருவர் மற்றவருக்காகத் தான் விட்டுக்கொடுத்து வாழும் வாழ்க்கையை இது எடுத்துக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை மாற்றுதல்

தம்பதியர் இருவரும் தாம் அணிந்துள்ள மாலைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி மாறி அணிதல் மாலை மாற்றுதலாகும். மூன்றுமுறை மாலை மாற்றப்படும். உடல் இரண்டானாலும் இருவரும் இனி ஒருவரே. உள்ளம் ஒன்றே என்னும்படியாக எண்ணி இம் மாலை மாற்றுதல் நடைபெறும்.

## விசேட ஹோமம்

விசேட திரவிய ஹோமம், நவக்கிரக ஹோமமும், பிராயச்சித்த ஹோமம் முதலியன விசேட ஹோமங்களாகும். மணவறையின்முன் மணமக்களை கிழக்கு நோக்கி நிற்கச்செய்து மாப்பிள்ளைத் தோழனிடம் குரு நென்மலரைக் கொடுக்க அவர் அவற்றை மாப்பிள்ளையிடம் கொடுக்க மணமகன் தான் பெற்ற நென்மலரை மணமகளின் கைகளில் கொடுப்பார். பின் மீளவும் தோழன் மூலம் தான் பெற்ற நெல்மலரையும் சேர்த்து மணமகளின் இரு கைகளையும் தாங்கி குருக்கள் அக்கினியில் சிருக்ஸ்ருவம் மூலம் நெல் சொரியும் போது அக்கினியில் இடுவர். "அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எமக்கு தந்தருள வேண்டும் "என வேண்டி நென்மலரை சொரிதல் வேண்டும். இவ்வாறு மூன்றுமுறை அக்கினியை வலம் வந்து நென்மலரை (நெற்பொரி) சொரிவர்.

## அருந்ததி காட்டல்

அக்கினியை மூன்றாவதுமுறை வலம்வரும்போது மணமக்களை வாயிலில் வைக்கப்பட்டிருக்கும் கும்பத்திற்கு முன்னால் கிரியாகுரு அழைத்துச் செல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வடக்குத்திசை நோக்கி நிற்கச் செய்து பஞ் சாரத்தி காட்டி அருந்ததியினதும் துருவ முனிவரதும் வரலாற்றைக்கூறி, அருந்ததி, துருவ நட்சத்திரங்களைக் காட்டி அவர்களைப்போல உலகம்போற்றி வணங்கக் கூடியதாக கற்பொழுக்கம் காப்போம் எனவும், சலனம் அடைதல் இன்றி, கொள்கை வலு உடையவராக வாழ்வோம் எனவும், அதற்குவேண்டிய மன உறுதியைத் தரவேண்டும் எனவும், வேண்டி அவர்கள் ஆசியையும் வேண்டி, வணங்க வேண்டும். பகலில் திருமணம் நடை பெறுமானால் இந்த இடத்தில் விவாகக் கிரியைகளை நிறுத்தி மணமக்கள் போசனம் பண்ணாது (வேண்டு மானால் பானம் மாத்திரம் பருகலாம்.) இரவு வரை இருத்தல் வேண்டும். இரவு அருந்ததி காட்டித் தொடர்ந்து கிரியைகளைச் செய்தல் வேண்டும். இதுவே சரியான விதியாகும். ஆனால் தற்காலத்தில் பகலில் நடைபெறும் திருமணங்களில் கும்பத்திற்குப் பஞ்சாராத்தி காட்டி அருந்ததி பற்றிய தத்துவத்தை குரு கூறி மனவுறுதி கொள்ளச் செய்வார்.

## மகாபூர்ணாகுதி

மகாபூர்ணாகுதிக்குரிய தேங்காய், பழம், வெற் றிலை,சமித்து, நெற்பொரி போன்ற பொருட்களை தாம்பாளத்தில் வைத்து கிரியாகுரு மணமக்களின் கைகளில் கொடுப்பார். அவர்கள் அதனை குருக்கள் ஓமகுண்டத்தில் கிருக்ஸ்ருவ மூலம் நெல் சொரியும் போது இடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசீர்வாதம்

தம்பதியினரை மணவறையின் முன் கிழக்கு முகமாக நிற்கச் செய்து குருக்கள் இறைவனைப் பிரார்த்தித்து மங்கள தோத்திரம் செய்து மணமக்க ளுக்கு அட்சதை இட்டு ஆசீர்வதிப்பார். அதனைத் தொடர்ந்து மணமக்களின் பெற்றோர் அட்சதை இட்டு ஆசீர்வதிப்பார்கள். (முதலில் மணமகனின் பெற் றோரும், பின் மணமகளின் பெற்றோரும் ஆசீர்வதிப்பர்)

## சபையினர் அறுகரிசி எடுத்தல்

இதுவும் ஆசீர்வாதம் ஆகும். அதாவது அறுகும் மஞ்சலும் கலந்த அரிசியும் மணமக்களுக்கு இட்டு வாழ்த்துதல் ஆகும். அறுகுடன் கூடிய அரிசியை பெரியோர் இரு கரங்களினாலும் எடுத்து " ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, மூங்கில் போல் சுற்றம் சூழ பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்று வாழ்த்தி மணமக்களின் உச்சிகளில் மூன்று முறை தனித் தனி இட்டு வாழ்த்துதல் வேண்டும்.

## நிறைவு

மணமக்களின் கைகளில் கட்டப்பட்ட காப்புக் களை அவிழ்த்து பவித்திரத்தைக் கழற்றி வெற்றி லையில் வைத்து தட்சிணையும் சேர்த்து கிரியா குரு வுக்கு வழங்கி ஆசி பெறுவர். இதனைத் தொடர்ந்து மணமக்களுக்கு ஆரத்தி எடுத்து திருஷ்டி கழித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் தோழனும் மணமகன், மணமகள், தோழி என்ற வரிசையில் மங்கள வாத்தியங்கள் முழங்க, சபையோர் வாழ்த்த, வீட்டினுள்ளே வலது காலை எடுத்து வைத்து மணமக்கள் செல்வர். இவர்களின் முன்னால் பூரண கும்பம், மங்கலதீபம் ஆகியவற்றை மங்கல மங்கையர் கொண்டு செல்வர். வழிபாட்ட றையில் இவற்றை வைத்த பின் தம்பதிகள் பெற்றோர் ஆசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## பூதாக்கலம்

புதிய பானையில் நிறைவாகச் சமைத்த சாதத்தினை இருவருக்கும் ஒரே வாழையிலையில் மணமகள் மூலம் படைக்கச் செய்து முதலில் மணமகள் மணமகனுக்கு மூன்றுமுறை தன்கையால் உணவு ஊட்ட வேண்டும். தொடர்ந்து மணமகனும் மண மகளுக்கு மூன்றுமுறை தன் கையால் உணவு ஊட்டுவார்.

## விருந்துபசாரம்

திருமணத்திற்கு வருகை தந்தவர்களுக்கு விருந்து பசாரம் நடைபெறும். ஆண்களுக்கான முதற் சபையில் மணமகன் இருந்து உணவருந்துவார். இதே போல் பெண்களுக்கான முதற்சபையில் மணப்பெண் இருந்து உணவு அருந்துதல் வேண்டும். விருந்துண்டபின் விருந்தினரை வழியனுப்பும்போது மணமக்கள் மங்க லப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கி, வழி யனுப்புவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடி மனதால் ஆரத் தழுவி
அன்பு மழை பொழிந்து
இன்றுபோல் என்றும் இன்பமுடன்
வாழ்க என வழுத்தி வாழ்த்தி
மணநாளை மகிழ்வுடன் சிறப்பித்த
அன்பு உள்ளங்களுக்கு
எம் உளமார்ந்த நன்றி .

**03.09.2004** **புதுமணத் தம்பதிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org